22nd December 1956]

Sri S. SWAYAMPRAKASAM : சாதாரணமாக மிராசுதாரர்கள் என்பவர்கள் மண்வெட்டியை எந்தக் காலத்திலும் பிடித்திருக்கமாட்டார்கள். ஆகவே, நடுத்தர வகுப்பினரை, அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி, போட்டால் செலக்ஷன் ஒருவாறு நன்றாக இருக்க ஏதுவாகும் என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது தஞ்சாவூர் யோசனையாய் இருக்கிறது. ஆகவே, அதை அலசிப் பார்த்துத்தான் பதில் சொல்ல வேண்டும்.

Sri R. S. KRISHNASWAMY NAYUDU : இந்தத் தேர்வுக்குழுவில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர் ஒருவர்தானா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அநேகமாக ஒருவரைத்தான் நியமிக்கப்படுகிறது. ஒரு சில இடங்களில் ஒன்றுக்குமேல் சில சமயம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

Sri A. AYYANAR : பிரத்தியேகமாக நடத்துப்பட்டுவரும் போதனா முறை பள்ளிகளில் சர்க்கார் நியமன மெம்பர் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பள்ளிகளில் அவர்களே இந்தத் தேர்தலை நடத்துகிறார்கள். தவறு ஏதாவது நடந்தாலொழிய குறுக்கிடாமல் இருப்பதே நல்லது.

The Salem Sri Murugan Colour Works, Voraiyur

* 399 *Q.*—Sri P. RANGASAMY REDDIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Salem Sri Murugan Colour Works, Voraiyur, is in the list of approved dyers for the Co-operative Weaving Societies in Tiruchirappalli ;

(*b*) whether a complaint bearing No. R. 583, dated 14th September 1956, was received by the Registrar of Co-operative Societies, and by the Government, from the Turaiyur Weavers' Co-operative Production and Sales Society, Limited, against the said Colour Works ;

(*c*) the nature of the complaint and the action taken thereon ; and

(*d*) whether a resolution was passed by the Turaiyur Weavers' Co-operative Production and Sales Society, Limited, on 16th April 1956 and the Business Manager of Madras State Weavers' Co-operative Society, Limited, was addressed with the resolution, to remove the said Colour Works from the approved list, and if so, the result thereof ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. The Salem Sri Murugan Colour Works, Voraiyur, is in the panel of dyers approved by the Madras State Handloom Weavers' Co-operative Society, Limited.

(*b*) A copy of the complaint of the Turaiyur Weavers' Co-operative Society addressed to the Business Manager of the Madras State Handloom Weavers' Co-operative Society was received by the Government in September 1956 and it was transferred to the

Registrar of Co-operative Societies for necessary action. The reference does not bear No. R. 583, but the Society's registration No. is Rs. 583.

(*c*) The petition contained the following allegation and request :—

(1) the dyers have not returned the 30 bundles of yarn entrusted to them for dyeing ;

(2) the State Society should indicate why it approved the dyers and included them in the panel.

The Society was informed by the Madras State Handloom Weavers' Society that in its letter, dated 9th July 1956 addressed to the Dyers the receipt of 30 bundles in grey state in settlement of the dues had been acknowledged. The Society was also informed that the Dyers were approved at the instance of the Deputy Registrar, Tiruchirappalli (North) and that it was open to Society to choose some other Dyers in the panel.

In view of the action taken by the Business Manager of the Madras State Handloom Weavers' Society, the Registrar did not consider any further action necessary.

(*d*) Yes, Sir. The State Society has not considered it necessary to remove the dyers concerned from the approved panel.

Sri P. RANGASWAMY REDDIAR : இந்த சேலம் ஸ்ரீ முருகன் கலர் வொர்க்ஸ் என்பது தனிப்பட்ட நபரால் நடத்தக்கூடிய ஸ்தாபனமா அல்லது ரெஜிஸ்ட்டர் கம்பெனியா அல்லது பார்ட்டனர்ஸ் பிஸினஸ்ஸா ? அவர்களிடம் கொடுக்கப்பட்ட நூல் கட்டுகளை திருப்பி கொடுக்கப்படவில்லையென்றால் அவர்களிடம் அதன் பேரில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தரவு இட்டிருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது தனிப்பட்ட நபர் நடத்தக்கூடிய ஸ்தாபனமா இல்லையா என்பதைப்பற்றி எனக்கு இப்போது தகவல் இல்லை. தனிப்பட்ட நபர் நடத்தும் ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். இது ஸ்டேட் ஹேண்ட் லூம் கமிட்டியில் பரிசீலனையில் இருக்கிறது. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நூல் திருப்பிக்கொடுக்கப்படவில்லையானல் அவர்களின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும். இது எதோ அவர்களுக்கு பாக்கி இருந்ததற்காக வகை வைத்ததாக தெரிகிறது.

Sri M. KALYANASUNDARAM : தனிப்பட்ட சாயப்பட்டறைகளுக்கு எதாவது சட்டங்கள் உண்டா ? இல்லையென்றால் எதாவது எற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதற்கு பிரத்யேகமான சட்டங்கள் இருக்கின்றன.

Sri P. RANGASWAMY REDDIAR : கனம் அங்கத்தினரின் கேள்வி எனக்கு புரியவில்லை. நான் கேட்க விரும்புவது சேலம் ஸ்ரீ முருகன் கலர் வொர்க்ஸ் கம்பெனியில் கொடுக்கப்படும் வேலைகள் ரொம்பவும் தாமதப்பட்டு வருவதாகவும், அங்கு சாயம் தெளிப்பதற்கு சரியானபடி தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்கப்படுவதில்லை என்று தகராறு இருந்து வருவதாகவும், இந்த கம்பெனியை டெப்யூட்டி ரெஜிஸ்ட்ரார் அதிகமாக ஆதரித்து வருவதாகவும் சொல்லப்படுகிறது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

22nd December 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதை அதிகமாக ஆதரிப்பதற்கு ஒரு காரணமும் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : இந்த கம்பெனிகளில் செய்யும் வேலைகளுக்கு கொடுக்கப்படும் பில் தொகையைவிட குறைவான தொகை வாங்கி வருவதும் இதனால் சில தகராறுகள் இருந்து வருவதும் அரசாங்கத்திற்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது எனக்கு நேரடியாக தெரியாது. இப்பொழுது கனம் எதிர்கட்சி உப தலைவர் சொல்லுவதி லிருந்துதான் இது புலப்படுகிறது.

Recreation facilities for nurses in the nurses quarters

* 400 *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state— 9-30 a.m.

(*a*) the facilities provided for nurses for recreation in the nurses quarters—

(i) in the Madras City; and

(ii) in the district headquarters;

(*b*) the cost of amenities provided for the above purpose; and

(*c*) whether the Government propose to provide rest-houses for nurses, health visitors and midwives?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

(*c*) No, Sir.

SRI V. BALAKRISHNAN : ஸார், ஐந்து மணிக்கு அப்புறம் ஈடு படுகிற காரியங்களும் இந்த ரிக்ரியேஷனில் சேர்க்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினருடைய அனுபவம் எப்படியென்று எனக்கு தெரியாது. நான் அப்படிதான் என்று நினைக்கிறேன்.

Amendment of the Madras Cultivating Tenants' Protection Act, 1955

* 401 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to amend the Madras Cultivating Tenants' Protection Act, 1955, as amended, to rectify the defects, if any, noticed while implementing it?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI N. K. PALANISAMY : நடைமுறையில் இதில் பல கஷ்டங்களும் இருக்கிறது. ஏனென்றால் இதற்கு அதிகாரிகள் ஆர். டி. ஓ.க்களிடமிருந்து ரிட்டன் அபிடவிட் வேண்டுமென்று கேட்கிறார்கள். இதற்கு பலவிதமான

[a] Printed as Appendix page 469 infra.